STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI
12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045
https://www.evastaliniasacademy.in/
Contact Number - +91-8678969915, +91-9940332851

## சென்னை ஐசிஎஃப் ஆலையில் தயாராகும் 50-வது வந்தே பாரத் ரயில்




**சென்னை:** சென்னையில் உள்ள ஐசிஎஃப் ஆலையில் நாட்டின் 50-வது வந்தேபாரத் ரயில் தயாரிப்புப் பணிகள் தீவிரமடைந்துள்ள நிலையில், இம்மாத இறுதியில் இந்த ரயிலைத்தயாரித்து, ரயில்வே வாரியத்துக்கு அனுப்ப ஐசிஎஃப் திட்டமிட்டுள்ளது.

2019-ல் வந்தே பாரத் ரயில்சேவையை டெல்லி-வாரணாசி இடையே பிரதமர் மோடி தொடங்கிவைத்தார். தொடர்ந்து, டெல்லி-காத்ரா, காந்திநகர்-மும்பை என பல்வேறு வழித்தடங்களில் 45-க்கும் மேற்பட்ட வந்தே பாரத் ரயில்கள் இயக்கப்படுகின்றன.

தெற்கு ரயில்வேயில் சென்னை-கோவை, சென்னை-மைசூரு, சென்னை-விஜயவாடா, சென்னை- திருநெல்வேலி. திருவனந்தபுரம்-காசர்கோடு உள்ளிட்ட வழித் தடங்களில் வந்தே பாரத் ரயில்கள் இயக்கப்படுகின்றன. இவற்றுக்கு பயணிகள் மத்தியில் அதிக வரவேற்பு உள்ளது.

இதையடுத்து, அதிக அளவில் வந்தே பாரத் ரயிலை தயாரித்து வழங்க ஐசிஎஃப்-க்கு ரயில்வே வாரியம் அறிவுறுத்தியது. இதையடுத்து, வந்தே பாரத் ரயில் தயாரிப்பு பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், சென்னை ஐசிஎஃப் ஆலையில் 50-வது வந்தே பாரத் ரயில் தயாரிப்பு பணி நடைபெறுகிறது. இதுகுறித்து ரயில்வே அதிகாரிகள் கூறியதாவது: வந்தே பாரத் ரயிலுக்கு பயணிகள் மத்தியில் அதிக வரவேற்பு உள்ளது. எனவே,சென்னை ஐசிஎஃப் 2023-24-ம் நிதியாண்டில் 736 வந்தே பாரத் ரயில்பெட்டிகள் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளது. வாரத்துக்கு 2 அல்லது3 வந்தே பாரத் ரயில்களை தயாரித்து வழங்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. தலா 16 பெட்டிகளைக் கொண்ட 46 வந்தே பாரத் ரயில்கள்அல்லது தலா 8 பெட்டிகள் கொண்ட92 வந்தே பாரத் ரயில்களைத் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில், சென்னை ஐசிஎஃப் ஆலையில் 50-வது வந்தே பாரத் ரயில் தயாரிப்புப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. இம்மாத இறுதிக்குள் இந்த ரயிலை தயாரித்து வழங்குவோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## உலக தலைவர்களில் பிரதமர் மோடி மீண்டும் முதலிடம்: சர்வதேச கருத்துக் கணிப்பில் தகவல்



**புதுடெல்லி:** செல்வாக்குமிக்க உலக தலைவர்களில் பிரதமர் மோடி மீண்டும் முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளார்.

அமெரிக்க தலைநகர் வாஷிங்டனை தலைமையிடமாகக் கொண்டு பிரபல கருத்து கணிப்புநிறுவனமான ‘மார்னிங் கன்சல்ட்' செயல்படுகிறது. இந்த நிறுவனம் சார்பில் உலகின் செல்வாக்குமிக்க தலைவர்கள் குறித்து அந்தந்த நாடுகளின் மக்களிடம் அவ்வப்போது கருத்துக் கணிப்பு நடத்தப்படுகிறது. இதன்படி அமெரிக்கா, இந்தியா உட்பட 22 நாடுகளில் 'மார்னிங் கன்சல்ட்' நிறுவனம் அண்மையில் கருத்துக் கணிப்பு நடத்தி உலகத் தலைவர்களின் தரவரிசை பட்டியலை வெளியிட்டு உள்ளது.

இந்த பட்டியலில் இந்திய பிரதமர் மோடி முதலிடத்தைப் பிடித்துள்ளார். அவருக்கு ஆதரவாக 76 சதவீதம் பேர் வாக்களித்துள்ளனர்.

மெக்ஸிகோ அதிபர் லோபஸ் ஒபரடோர் 66 சதவீத வாக்குகளுடன் இரண்டாம் இடத்திலும் சுவிட்சர்லாந்து அதிபர் அலைன் பெர்செட் 58 சதவீத வாக்குகளுடன் 3-வது இடத்திலும் உள்ளனர்.

பிரேசில் அதிபர் லூயிஸ் இனாசியோ லூலா டா சில்வா 49 சதவீத வாக்குகள், ஆஸ்திரேலிய பிரதமர் அந்தோணி அல்பானீஸ் 47 சதவீத வாக்குகள், இத்தாலி பிரதமர் ஜார்ஜியா மெலோனி 41 சதவீத வாக்குகள், பெல்ஜியம் பிரதமர் அலெக்சாண்டர் டி குரோ37 சதவீத வாக்குகளுடன் அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளனர். அமெரிக்க அதிபர் ஜோ பைடன் 37 சதவீத வாக்குகளுடன் 8-வது இடத்தில் உள்ளார்.

ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்செஸ் 37%, இந்திய வம்சாவளியை சேர்ந்த அயர்லாந்து பிரதமர் லியோ வரத்கர் 36%, சுவீடன் பிரதமர் உல்ப் கிறிஸ்டர்சன் 33%, போலந்து பிரதமர் மேத்தியூஸ் மோரவெக்ஸி 31%, கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ 31%, ஆஸ்திரியா பிரதமர் கார்ல் நெகம்மர் 28%, நெதர்லாந்து பிரதமர் மார்க் ரூட்டே 27%, நார்வே பிரதமர் ஜோனஸ் கார் ஸ்டோரா 25%, இந்திய வம்சாவளியை சேர்ந்த பிரிட்டிஷ் பிரதமர் ரிஷி சுனக் 25%, பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மெக்ரான் 24%, ஜெர்மனி பிரதமர் ஒலாஃப் ஷோல்ஸ் 21%, தென்

கொரிய அதிபர் யூன் சோக் யோல் 18%, ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடோ 16%, செக் குடியரசு பிரதமர் பீட்டர் பியாலோ 16 % வாக்குகளை பெற்று அடுத்தடுத்த இடங்களில் உள்ளனர்.

இந்த ஆண்டில் கடந்த பிப்ரவரி, ஏப்ரல், செப்டம்பர் மாதங்களில் 'மார்னிங் கன்சல்ட்' நிறுவனம் உலக தலைவர்களின் தரவரிசை பட்டியலை வெளியிட்டது. கடந்த பிப்ரவரியில் 78 சதவீத வாக்குகள், கடந்த ஏப்ரல், செப்டம்பரில் 76 சதவீத வாக்குகளுடன் பிரதமர் மோடி முதலிடம் பிடித்திருந்தார். கடந்த 9 ஆண்டுகளில்'மார்னிங் கன்சல்ட்' வெளியிட்ட கருத்து கணிப்பு முடிவுகளில் 75 சதவீதம் முதல் 80 சதவீத வாக்குகளைப் பெற்று பிரதமர் மோடி தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார்.

இதுகுறித்து பாஜக தலைவர்கள் கூறும்போது, "பிரதமர் மோடியின் நல்லாட்சிக்கு ஆதரவாக மக்கள் வாக்களித்து வருகின்றனர். ஒட்டுமொத்த உலக நாடுகளும் பிரதமர் மோடியின் வழிகாட்டுதலை விரும்புகின்றன'' என்றனர்.

## யுனெஸ்கோ அங்கீகாரம் பெற்றதற்கு இந்தியர்கள் கர்பா நடனமாடி அமெரிக்காவில் உற்சாகம்



**நியூயார்க்:** யுனெஸ்கோவின் கலாச்சார பாரம்பரிய பட்டியலில் குஜராத்தின் கர்பா நடனத்துக்கு இடம் கிடைத்துள்ளது. இதனை கொண்டாடும் விதமாக, இந்திய-அமெரிக்க சமூகத்தினர் நியூயார்க் நகரத்தின் டைம்ஸ் சதுக்கத்தில் உறைபனியையும் பொருட்படுத்தாது வியாழக்கிழமை மாலை ஒன்றுகூடி கர்பா நடனம் ஆடி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

இதுகுறித்து இந்திய தூதரக அதிகாரி வருண் ஜெப் கூறுகையில், “ குஜராத்தின் கர்பா நடனத்தை அமெரிக்க மண்ணில் கொண்டாடுவது ஒரு முக்கியமான வரலாற்று நிகழ்வு. இது, இந்தியாவின் பன்முகத்தன்மையையும், பாரம்பரிய கலாச்சாரத்தையும் வெளிப்படுத்தும் நிகழ்வு. இந்தியாவின் பல கலாச்சார கூறுகள் யுனெஸ்கோ பாரம்பரிய பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. வரும் ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்றார்.

கர்பாவை யுனெஸ்கோ பட்டியலில் சேர்க்க இந்திய அரசு எடுத்த முயற்சிகளுக்கும், பிரதமர் மோடிக்கும் இந்திய சங்கங்களின் கூட்டமைப்பு (எப்ஐஏ) தலைவர் அங்குர் வைத்யா நன்றி தெரிவித்தார்.

EVA STALIN